**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.45/2025**

**Date : 31.12.2025**

**PW3 பிரியா**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எத்தனை ஆண்டுகளாக கிராம நிர்வாக அதிகாரியாக பணிசெய்து வருகிறேன் என்றால் 2 1/2 வருடங்களாக களரம்பட்டி கிராமத்தில் பணிசெய்து வருகிறேன். வட்டாச்சியர் அவர்களுக்கு அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அதிகாரம் இல்லை என்று உங்களுக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.நான் போலீஸார் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் போலீஸார் விசாரணையில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் பூஜை பொருட்கள், தேங்காய் அனைத்தும் மாலை 4.00 மணிக்குத்தான் எடுத்துவந்தார் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவத்தின்போது டி.எஸ்.பி, இன்ஸ்பெக்டர் மற்றும் மற்ற போலீஸ் அதிகாரிகள் இருந்தார்கள் என்றால் இருந்தார்கள். மேற்படி சம்பவத்தின்போது அந்த இடத்தில் பொதுமக்கள் சுமார் 150 பேர் இருந்திருப்பார்கள். நான் போலீஸ் விசாரணையில் எந்த எதிரி எந்த கெட்ட வார்த்தையால் திட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த சம்பவம் சம்மந்தமாக தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் அளிக்கவில்லை. மேற்படி சம்பவம் 11.30 முதல் மாலை 2.00 மணி வரை நடந்தது. சம்பவத்தின்போது நான் முழுவதும் அங்கேதான் இருந்தேனா என்றால் இருந்தேன். போலீஸார் என்னை சம்பவ இடத்தில் வைத்து 02.11.2024 விசாரணை செய்தார்கள். புகார்தாரர்

கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.